# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 05.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 20217/SCIC/2023**

திரு. பெ.முருகேசன் த/பெ.ஆர்.பெரியசாமி பத்தர் (லேட்) மேல்முறையீட்டாளர்
எண்.2/705, வடக்கு வெள்ளாளர் தெரு
மணக்கரம்பை
தஞ்சாவூர் - 613 205.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
சார் பதிவாளர் அலுவலகம்
மகர்நோன்புசாவடி, தஞ்சாவூர் மாவட்டம்.

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 11.08.2023 |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 13.09.2023 |
| 3. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 19.09.2023 |
| 4. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 16.11.2023 |
| 5. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 11.11.2024 |
| 6 | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 30.12.2024 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / சார் பதிவாளர் அவர்கள், மகர்நோன்புச்சாவடி சார்பதிவாளர் அலுவலகம், தஞ்சாவூர் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "பார்வை - தஞ்சாவூர் மாநகராட்சி டிவிஷன் 3, வார்டு-6

புதுப்பட்டின கிராமம் TS No.1884 மீது அசல் கிரய ஆவண நகல் (ஆவண எண்.436/1938)உள்ளிட்ட 5 - தொடர்பாக - போலி உரிமை ஆவண எண்.1329/1993 (எழுதிக் கொடுத்தவர் - V.மணி - எழுதி வாங்கியவர் - R.ஞானாமிர்தம்) ஏற்படுத்த காரணமான சான்றாவணம் நகல் குறித்த விபரம் தகவலாக வேண்டப்படுகிறது." என்பன போன்று 7 (ஏழு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (05/06/2025) காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து கலந்து கொண்டார். பொது அதிகார அமைப்பின் சார்பில், ஆணையத்தின் முன் திரு.ப.சொக்கலிங்கம், சார் பதிவாளர், மகர்நோன்புச்சாவடி, தஞ்சாவூர் அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு ஏற்கனவே, 19/09/2023, 13/11/2024 தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக, தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர், தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவிலும், இன்றைய விசாரணையின் போதும், தனக்கு அனுப்பப்பட்ட தகவல்களில் இனங்கள் 1,2,3,4,6,7 ஆகியவற்றிற்கான தகவல் தவறானது என்றார்.**

**3. இன்றைய விசாரணையின்போது, பொதுத் தகவல் அலுவலர், இனவாரியான 03/06/2025 தேதியிட்ட தகவல்களைக் கொண்டு வந்திருந்தார். அதனை, மனுதாரருக்கு WhatsApp வாயிலாக அனுப்பப்பட்டது. அதன் பின்னர், மனுதாரர், அத்தகவல்களைப் பார்வையிட்ட பின் TS No.1884 குறித்த தனது 18/08/2022 தேதியிட்ட புகார் மனுவில் கோரியவாறு 2(J)-பிரிவின் கீழ் ஆவணங்களைப் பார்வையிடுவதற்கான அனுமதி தனக்கு வழங்கப்படவில்லை என்றார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர் தெரிவிக்கையில், மேற்குறிப்பிட்ட 18/08/2022 தேதியிட்ட புகார் மனு, மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பியுள்ளார், சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அப்புகார் மனு அனுப்பப்படவில்லை என்றும், எனவே, மனுதாரரின் கோப்பு உள்ளிட்ட புகார் மனு தமது அலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லை என்றும் ஆகவே, தான் மனுதாரர் கோரியவாறான தகவல் ஏதும் பராமரிக்கப்படவில்லை என்று பதில் அளித்ததாகவும் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையினை ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது. இன்றைய விசாரணையின்போது, மனுதாரர், தனது பிரிவு 6(1)-ன் கீழான மனுவின்படி இனம் 7-க்கு தகவல் குறித்து ஆட்சேபணை தெரிவித்தார். அதற்கான தகவல் பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்டிருக்கிறது, அதனை பரிசீலனை செய்து ஆணையம் ஏற்கிறது. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

## வழக்கு எண்கள். SA 20217/SCIC/2023

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
மகர்நோன்புசாவடி, தஞ்சாவூர் மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**

திரு. பெ.முருகேசன் த/பெ.ஆர்.பெரியசாமி பத்தர் (லேட்)
எண்.2/705, வடக்கு வெள்ளாளர் தெரு
மணக்கரம்பை
தஞ்சாவூர் - 613 205.

RG/PC